**ஒபெக் நிதியளிக்கப்பட்ட வீதி வலையமைப்பு அபிவிருத்தி செயற்திட்டம் - 2023**

---

ஒபெக் நிதியளிக்கப்பட்ட வீதி வலையமைப்பு அபிவிருத்தி செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள் நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராக உள்ளது.

இலங்கையின் அபிவிருத்திக் கொள்கை கட்டமைப்பின் ஒரு பகுதியாக உண்டாக்குவதும், மேல், வடமேல், மத்திய, தென் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் 202 கிலோமீற்றர் தேசிய வீதிகளை மேம்படுத்துதல் மற்றும் பாலங்களை புனரமைத்தல் மற்றும் விரிவுபடுத்துதல் மூலம் போக்குவரத்துத் துறையின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் வீதி வலையமைப்பு இணைப்பை மேம்படுத்துவதும் இச் செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 7,121.32 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 62.46 மில்லியனானதுடன் அதில் ரூபா 4,560 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 40 மில்லியன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 2,561.32 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 22.46 மில்லியன் மிகுதித் தொகை இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2013 சனவரி 16 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2016 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும் செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்திசெய்தல் திகதி 2025 பெப்ரவரி 02 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தை தவிர்த்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும்

நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல. | கணக்கீட்டுக் குறைபாடு/ கணக்காய்வு விடயம் | தொகை ரூபா. மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 08 இன் பிரகாரம் 2,038 காணித் துண்டுகளுக்காக காணி உரிமையாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய இழப்பீடுகளுக்கான ஏற்பாடுகள் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 21.50 | சுவீகரிப்பதற்கு குறித்துரைக்கப்பட்ட காணித்துண்டுகளிற்கான இழப்பீடு விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தால் தீர்மானிக்கப்படுகிறது. தொகையை இறுதி செய்தவுடன், பிரதேச செயலாளர்கள் தமது கணிப்பீடுகளின் அடிப்படையில் உறுதிச்சீட்டுக்களை தயாரிக்கிறார்கள். எதிர்காலத்தில் சுவீகரிக்கப்படும் காணித் துண்டுகளிற்கு ஏற்பாட்டை மேற்கொள்வதற்கான தொகையை செயற்திட்ட அலுவலகத்தால் மதிப்பிட முடியாது. | SLPSAS இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடுகளை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட மதிப்பாய்வில் விசேட கவனம் செலுத்தப்பட்டு எழுத்துமூல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 08 இன் பிரகாரம் 2,521 காணித் துண்டுகளின் இழப்பீட்டுக் கொடுப்பனவுகளில் தாமதம் ஏற்பட்டால் காணி உரிமையாளர்களுக்கு வட்டி செலுத்தப்படுவதற்காக நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 75.00 | அடுத்த நிதிக்கூற்றுக்களில் தேவையான திருத்தங்கள் செய்யப்படும். | -மேற்படி- |
| (இ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் தற்காலிகமாக நிதியளிக்கப்பட்ட தொகை | 70.84 | RDA இடமிருந்து விடுவிக்கப்பட்ட நிதியானது முறையே 2014, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் தேசிய சேமிப்பு வங்கி, DFCC | தற்காலிக நிதியுதவி முறையான அங்கீகாரத்தின் கீழ் வழங்கப்பட வேண்டும். மேலும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | பத்து ஆண்டுகளுக்கும் மேலாக நிதிக்கூற்றுக்களில் உரிமை மூலதனமாக சேர்க்கப்பட்டிருந்தது. மேலும், மேற்படி நிதியுதவிக்கான அங்கீகாரம் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | வங்கி மற்றும் இலங்கை வங்கி ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட கடனின் ஒரு பகுதியாகும். மேற்படி நிதியுதவிக்கான அங்கீகாரம் தொடர்பான அனைத்து விபரங்களும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் கிடைக்கின்றன. | ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட மதிப்பாய்வில் எழுத்துமூல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2016 ஆம் ஆண்டில் வரிசை அமைச்சின் இழப்பீட்டு கொடுப்பனவு 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் உரிமை மூலதனமாக காட்டப்பட்டிருந்தது. எனினும், மேற்படி செலவினங்களுக்கான அங்கீகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 16.12 | இதை வரிசை அமைச்சு செலுத்தியிருக்கவில்லை. இழப்பீட்டு கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக அவர்கள் கட்டுநிதியை விடுவித்திருந்தனர். எனவே, இது நிதிக்கூற்றுக்களில் உரிமை மூலதனத்தின் கீழ் GOSL நிதிக் கூறில் சேர்க்கப்பட வேண்டும். இது அடுத்த நிதிக்கூற்றுக்களில் சீர்செய்யப்படும். | அரசாங்கத்தின் பங்களிப்பு முறையான அங்கீகாரத்தின் கீழ் வழங்கப்பட வேண்டியதுடன் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட மதிப்பாய்வில் எழுத்துமூல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும். |

**2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை/ கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 571 | 2017 ஆம் ஆண்டு முதல் நில அளவைகளுக்கான ரூபா 0.1 மில்லியன் தொகையான நிறுத்திவைத்தல் பணத்தை விடுவிப்பதற்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இரண்டு அளவைகளும் பூர்த்தி செய்யப்படவில்லை. எனவே, நிறைவு சான்றிதழ்கள் வழங்கப்படவில்லை. 2024 ஆம் ஆண்டில் இந்தத் தொகையை திரும்ப எழுதுவதற்கான சாத்தியக்கூறுகளைக் கண்டறிவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் வருமானத்திற்கான அவற்றின் மாற்றத்திற்கு முன்னர் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட மதிப்பாய்வில் எழுத்துமூல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | ஒப்பந்த நிபந்தனைகளின் 128 ஆம் உட்பிரிவு | ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் கையேற்றல் சான்றிதழை வழங்கும் திகதியில் ஒப்பந்ததாரரிடம் மீளளிக்கப்பட வேண்டும். எனினும், ஒருகொடவத்தை – அம்பத்தலே வீதியில் உள்ள 4/2 ஆம் இலக்க பாலத்தின் புனரமைப்பு தொடர்பாக 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கள ஆய்வுக்கூட உபகரணங்களுக்காக மொத்தமாக ரூபா 6 மில்லியன் தொகையை செயற்திட்டம் செலுத்தியுள்ளது. எனவே அந்த சாதகமற்ற ஒப்பந்த நிலைமைகள் ஒப்பந்ததாரர்களுக்கு தேவையற்ற நலன்கள் மற்றும் செயற்திட்ட செலவை மீறுவதற்கு வழிவகுக்கும். | ஒப்பந்த நிபந்தனையின் பிரகாரம் ஆய்வுகூடம் மற்றும் அளவை பொருட்கள் செயற்திட்டத்தின் முடிவில் ஒப்பந்ததாரரிடம் மீளளிக்கப்படுகின்றது. எனினும், போட்டித் தன்மையின் கீழ் கேள்விகள் அழைக்கப்படுகின்றதுடன் பொருட்களின் பெறுமானத்தேய்வு பெறுமதியை கருத்தில் கொண்டு விலைகள் குறிப்பிடப்படுகின்றன. கேள்விதாரர்களின் கோரப்பட்ட கேள்வி விலையுடன் ஒப்பிட்டு இது வெளிப்படுத்தப்படுகிறது. | ஒப்பந்தத்தின் விசேட நிபந்தனைகள் அமல்படுத்தலிற்கு முனனர் கவனமாக மதிப்பாய்வு செய்யப்பட வேண்டும். கேள்வி ஆவணங்களை மதிப்பாய்வு செய்யும் போது, தொழில்தருநரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், பணத்திற்கான பெறுமதியை வைத்திருப்பதற்கும் மற்றும் ஒப்பந்ததாரர்களுக்கு தேவையற்ற நலன்களைத் தவிர்ப்பதற்கும் TEC மற்றும் PC ஆல் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும். |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்**

**(i) காணி சுவீகரிப்பு**

| கூறு | செயற்பாடு | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | தாமதம்/ கணக்காய்வு விடயம் | தாமதங்களிற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|---|
| | | எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் காணித்துண்டுகள் | அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் காணித்துண்டுகள் | | |
| காணி சுவீகரிப்பு | RDA இற்கு உரித்துறுதி மாற்றம் | 2772 | 147 | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவலின் பிரகாரம் இச் செயற்த்திட்டத்தின் மூலம் 2,772 காணித்துண்டுகள் | மோசமான மேற்பார்வை காரணமாக காணி சுவீகரிப்பு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | சுவீகரிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 730 காணித்துண்டுகளுக்காக ரூபா 245.13 மில்லியன் நட்டஈடு மற்றும் 155 காணித்துண்டுகளுக்காக ரூபா 58.24 மில்லியன் தொகை தாமத வட்டி என்பன செலுத்தப்பட்டிருந்தன. எனினும், 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி சுவீகரிப்பு சட்டத்தின் 44 ஆம் உப உட்பிரிவின் பிரகாரம் 147 காணித்துண்டுகள் மாத்திரமே வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு மாற்றப்பட்டுள்ளன. மேலும் செயற்திட்டத்தால் சுவீகரிக்கப்பட வேண்டிய முழு தனியார் காணிகளில் 7.8 சதவீதத்தையே இது பிரதிநிதித்துவப்படுத்தியது. | நடவடிக்கைகளில் தாமதம். |

**முகாமைத்துவத்தின் பதில்** 44 ஆம் பிரிவின் பதிவு முன்னேற்றம் 2023.12.13 இல் உள்ளவாறு 7.8 சதவீதமாகும். 44 ஆம் பிரிவின் பதிவை விரைவுபடுத்துவதற்கு சம்பந்தப்பட்ட DSs அலுவலகத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் முன்னேற்றம் தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது.

**கணக்காய்வாளரின் பரிந்துரை** செயற்திட்டத்தின் குறித்துரைக்கப்பட்ட இலக்குகளை கால எல்லைக்குள் அடைந்துகொள்வதற்கு அதிகபட்ச முயற்சி எடுக்கப்பட வேண்டும். மேலும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட மதிப்பாய்வில் எழுத்துமூல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும்.

**(ii) சிவில் வேலைகள்**

| **கூறு** | **செயற்பாடு** | **2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு** | | **தாமதம்/ கணக்காய்வு விடயம்** | **தாமதங்களிற்கான காரணங்கள்** |
|---|---|---|---|---|---|
| | | **எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் சதவீதம்** | **அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் சதவீதம்** | | |
| சிவில் வேலைகள் | பாலங்களை புனரமைத்து அகலப்படுத்துதல் | **97** | **55 முதல் 74 வரை** | ஆர்டிஏ/எம்எவ்ஏபி/ஐசீபீ/ஔவ்ஐடி-1/09 மற்றும் ஆர்டிஏ/எம்எவ்ஏபி/ஐசீபீ/ஔவ்ஐடி-1/10 ஆகிய பொதிகளிற்கான | ஒப்பந்தத்தை வழங்குவதில் தாமதம் மற்றும் மோசமான மேற்பார்வை. |

ஆரம்ப ஒப்பந்த காலம் முறையே 2024 சனவரி 16 மற்றும் 2024 பெப்ரவரி 02 இல் கடந்திருந்த போதிலும், இரண்டு பொதிகளும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முறையே 55 சதவீத மற்றும் 74 சதவீத பௌதீக முன்னேற்றத்தை மாத்திரமே அடைந்துள்ளன. முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம், நிர்மாண பிரச்சனைகள் அந்தத் தாமதங்களை நேரடியாகப் பாதித்ததுடன் அந்தப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு செயற்திட்டத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

**முகாமைத்துவத்தின் பதில்** குழாய் பதிப்பதில் தாமதம், நீர் கசிவு மற்றும் தற்போதுள்ள NWS & DB குழாய்களின் மோசமான நிலை காரணமாக இரண்டு பாலங்களின் நிர்மாணப் பணிகள் தாமதமாகியது.

**கணக்காய்வாளரின் பரிந்துரை** கால எல்லைக்குள் செயற்திட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்கு அதிகபட்ச முயற்சி எடுக்கப்பட வேண்டும்.

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஒப்பந்த பொது நிபந்தனைகளின் (FIDIC-1999) 4.2 ஆம் பிரிவின் பிரகாரம் ஒப்பந்ததாரர் தனது சொந்த செலவில் செயலாற்றல் பிணையை பெற்றுக்கொள்ள வேண்டும். எனினும், செயற்திட்டமானது, அளவைப் பட்டியலில் 119.2(1) ஆம் இலக்க செலுத்தும் உருப்படியை உள்ளடக்கியிருந்ததுடன் ஒப்பந்தத்தின் விசேட நிபந்தனை மூலம் பொது நிபந்தனையை மாற்றியமைக்காமல், ஒப்பந்ததாரர்களால் ஏற்படுத்தப்பட்ட | எனினும், எதிர்கால ஒப்பந்தத்தில் இந்த செலுத்தும் உருப்படியை சேர்க்காமல் இருப்பதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஒப்பந்த நிபந்தனைகள் கவனமாக மதிப்பாய்வு செய்யப்பட வேண்டும். மேலும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் ஏற்பாடுகளின் |

| | | | |
|---|---|---|---|
| | செயலாற்றல் பிணைகளின் கிரயத்திற்காக ரூபா 1.75 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. | | பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட மதிப்பாய்வில் எழுத்துமூல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும். |
| (ஆ) | இரண்டு பொதிகளின் BOQ இன் பிரகாரம் ரூபா 38.66 மில்லியன் பெறுமதியான சிவில் பணிகள் முக்கியமாக ஏற்கனவே உள்ள கட்டமைப்புக்களை அகற்றுதல், கேபியன் தடுப்பு சுவர்களை நிர்மாணித்தல், பொறியியலாளர்களுக்கான அலுவலகம், பொறியியலாளர்கள் மற்றும் ஆய்வுகூடங்கள் போன்றவற்றிற்காக மதிப்பிடப்பட்டிருந்தது. எனினும் 2023 திசெம்பர் மாதத்திற்காக செலுத்தப்பட்ட கடைசி இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ் வரை அந்த உருப்படிகளுக்கு கொடுப்பனவு எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த ஒப்பந்தங்களின் பௌதீக முன்னேற்றம் முறையே 55 சதவீதம் மற்றும் 74 சதவீதமாக இருந்த போதிலும், அந்தத் திகதி வரையிலும் எந்த முன்னேற்றமும் இல்லாமல் அந்த செலுத்தும் உருப்படிகள் தேக்கமடைந்தமை தொடர்பான காரணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஒருகொடவத்தை - அம்பத்தலே வீதியில் 4/1 ஆம் இலக்க பாலத்தை புனரமைப்பதற்கும், 3/1 ஆம் இலக்க பாலத்தை விரிவுபடுத்துவதற்கும் முறையே ஆர்டிஏ/எம்எவ்ஏபி/ஐசீபீ/ஓஎவ்ஜடி-1/09 மற்றும் ஆர்டிஏ/எம்எவ்ஏபி/ஐசீபீ/ஓஎவ்ஜடி-1/10 ஆகிய ஒப்பந்த பொதிகளிற்காக தனித்தனியாக கேள்விகள் அழைக்கப்படுகின்றன. எனினும், இரண்டு ஒப்பந்தங்களும் ஒரு ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டன, மேலும் விலைப்பட்டியல் இல. 01 இன் கீழ் ஒரு அலுவலகம் மற்றும் ஒரு ஆய்வுக்கூடம் மாத்திரமே இரண்டு நிர்மாணங்களுக்கும் பயன்படுத்தப்படுகின்றன. எனவே, 3/1 ஆம் இலக்க பாலத்தின் விலைப்பட்டியல் இல. 01 இல் உள்ள சில உருப்படிகள் பயன்படுத்தப்படுவதில்லை, இது அரசாங்கத்திற்கு சேமிப்பாகும். மேலும், இரண்டு செயற்திட்டங்களுடன் முன்னேறும் போது, நிர்மாணம் தொடர்பான பெரும்பாலான உருப்படிகள் தற்போது பயன்படுத்தப்படுகின்றன, மேலும் தள நிலைமைகள் காரணமாக சில மாத்திரமே எஞ்சியிருந்தன. | BOQ உருப்படிகள் கவனமாக மதிப்பாய்வு செய்யப்பட வேண்டும். மேலும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட மதிப்பாய்வில் எழுத்துமூல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | (A005) பேராதனை – பதுளை – செங்கலடி வீதிப் பிரிவின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் பராமரிப்பு பணிகள் ஒப்பந்ததாரரால் செய்யப்பட்டிருக்கவில்லை. எனவே வீதி அபிவிருத்தி அதிகாரசபை மேற்படி வீதியை திருத்தம் செய்வதற்கும் பராமரிப்பதற்கும் ரூபா 7.71 மில்லியன் தொகையை செலவிட வேண்டியிருந்தது. 2019 ஆம் ஆண்டு முதல் RDA இற்கு செலுத்த வேண்டிய செலவினங்கள் அட்டுறுவாக இருந்த போதிலும் செயற்திட்டத்தால் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ஒப்பந்ததாரரிடமிருந்து ரூபா 0.70 மில்லியனை மாத்திரமே அறவிட முடிந்திருந்தது. உத்தரவாதங்களை பணமாக்குவதன் மூலம் ஒப்பந்ததாரரிடமிருந்து நிலுவை மீதியை அறவிடுவதற்கு செயற்திட்டத்தால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் அந்தத் தொகையை 10 தவணைகளில் தீர்மப்பனவு செய்வதற்கு ஒப்பந்ததாரருக்கு செயற்திட்டம் அனுமதித்தது, மேலும் செயற்திட்டத்தின் மூலம் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்ட இந்த சலுகைகளின் அடிப்படையை கணக்காய்வில் சரிபார்க்க முடியவில்லை. | நிலுவை கொடுப்பனவுகளை 10 தவணைகளில் தீர்ப்பனவு செய்யுமாறு ஒப்பந்ததாரர் கோரியுள்ளார், மேலும் இது பணிப்பாளர் நாயகம், RDA இற்கு அனுப்பப்பட்டதுடன் DG, RDA ஆல் அங்கீகரிக்கப்பட்டவாறு கழித்தல் இடம்பெற்று வருகிறது. | ஒப்பந்த நிபந்தனைகளின் பிரகாரம் ஒப்பந்ததாரரின் கடமைகள் கவனமாக மதிப்பாய்வு செய்யப்பட வேண்டும். மேலும் ஒப்பந்ததரரிடமிருந்து அந்த நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 குறைப்பயன்பாடுடைய வளங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் வெளிநாட்டுக் கடன் மற்றும் GOSL கூறுகளின் கீழ் முறையே ரூபா 500.29 மில்லியன் மற்றும் ரூபா 39.35 மில்லியன் தொகையான ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளன. எனினும், மீளாய்வாண்டின் போது ரூபா 5.79 மில்லியன் வெளிநாட்டுக் கடன் ஒதுக்கீடு மற்றும் ரூபா 3.84 மில்லியன் GOSL ஒதுக்கீடு செயற்திட்டத்தினால் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அரச கணக்குகள் திணைக்களத்தின் அறிக்கையின் அடிப்படையில் கடனுக்கான பணவளிப்புக்கள் கணக்கீடு செய்யப்பட்டுள்ளன. எனவே, செயற்திட்டம் நிதிக்கூற்றுக்களில் ரூபா 419.07 மில்லியனை காட்டியிருந்தது. ரூபா 75.43 மில்லியன் மிகுதி தொகை கணக்கீடு செய்யப்படாததுடன் நிதிக்கூற்றில் பெறவேண்டிய வெளிநாட்டு உதவியாகக் காட்டியுள்ளோம். கோரப்பட்டவாறு எந்த கட்டுநிதியும் பெறப்படவில்லை என்பதால் உள்ளூர் நிதி பயன்பாடு குறைந்திருந்தது. | கடன் நிதியை செயற்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |